# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1645/22 - 2010 මාර්තු 17 වැනි බදාදා - 2010.03.17

*1645/22 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 17 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### பதுளை பிரதேச சபைப் பகுதியில் அடங்கியுள்ள பதுளை நகரசபைப் பகுதிக்கான அபிவிருத்தித் திட்டத்திற்கான அங்கீகாரம்

*1982 ஆம் ஆண்டின் சட்ட இல. 4 இன் பிரிவு 8F இன் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு 24 சித்திரை 2008 ஆம் திகதிய நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவச் சபையின் பரிந்துரையினைக் கவனத்தில் கொண்டு நகர அபிவிருத்தி, மற்றும் புனிதப்பகுதி அபிவிருத்தி அமைச்சர் தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்தன ஆகிய நான், பதுளை பிரதேசசபைப் பகுதியில் அடங்கியுள்ள பதுளை நகர பகுதிக்கான அபிவிருத்தித் திட்டத்தை இத்தால் அங்கீகரிக்கின்றேன்.*

*தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்தன,*
*நகர அபிவிருத்தி மற்றும் புனிதப்பகுதி*
*அபிவிருத்தி அமைச்சர்.*

*"செத்சிறிபாய",*
*பத்தரமுல்லை,*
*2010, மாச்சு 09.*

### பதுளை மாநகர சபைப்பகுதிக்கான அபிவிருத்தி திட்ட அங்கீகாரம்

*2010 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 9 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட பதுளை மாநகரசபைப் பகுதியானது நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திருத்தப்பட்ட 1982 ஆம் ஆண்டின் சட்ட இலக்கம் 4 இற்கு அமைய 8A இன் கீழ் தயாரிக்கப்பட்டு கௌரவ நகர அபிவிருத்தி மற்றும் புனிதப் பகுதி அபிவிருத்தி அமைச்சருக்கு சட்டப் பிரிவு 8F இன் கீழ் உரித்தாக்கப்பட்ட திருத்தச் சட்டத்திற்கு அமைய இவ்வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுமென பொதுமக்கள் இத்தால் அறிவிக்கப்படுகின்றன.*

*பிரசன்னா சில்வா,*
*பணிப்பாளர் நாயகம்,*
*நகர அபிவிருத்தி அதிகார சபை.*

*"செத்சிறிபாய",*
*பத்தரமுல்லை,*
*2010, மாச்சு 17.*

*4- 82/1*

## மாத்தறை மாநகர சபைப் பகுதியில் அடங்கியுள்ள மாத்தறை மாநகரசபைப் பகுதிக்கான அபிவிருத்தித் திட்டத்திற்கான அங்கீகாரம்

*1982 ஆம் ஆண்டின் சட்ட இல. 4 இன் பிரிவு 8F இன் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு 13.11.2008 ஆந் திகதிய நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவச் சபையின் பரிந்துரையினைக் கவனத்தில் கொண்டு நகர அபிவிருத்தி மற்றும் புனிதப் பகுதி அபிவிருத்தி அமைச்சர் தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்தன ஆகிய நான், மாத்தறை மாநகர சபை பகுதியில் அடங்கியுள்ள மாத்தறை மாநகர பகுதிக்கான அபிவிருத்தித் திட்டத்தை இத்தால் அங்கீகரிக்கின்றேன்.*

*தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்தன,*
*நகர அபிவிருத்தி மற்றும் புனிதப்பகுதி அபிவிருத்தி அமைச்சர்.*

*"செத்சிறிபாய",*
*பத்தரமுல்லை,*
*2010, மாச்சு 09.*

## மாத்தறை மாநகர சபைப்பகுதிக்கான அபிவிருத்தித் திட்ட அங்கீகாரம்

*2010 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 9 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட மாத்தறை மாநகரசபைப் பகுதியானது நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திருத்தப்பட்ட 1982 ஆம் ஆண்டின் சட்ட இலக்கம் 4 இற்கு அமைய 8A இன் கீழ் தயாரிக்கப்பட்டு கௌரவ நகர அபிவிருத்தி மற்றும் புனிதப் பகுதி அபிவிருத்தி அமைச்சருக்கு சட்ட பிரிவு 8F இன் கீழ் உரித்தாக்கப்பட்ட திருத்தச் சட்டத்திற்கு அமைய இவ்வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுமென பொதுமக்கள் இத்தால் அறிவிக்கப்படுகின்றன.*

*பிரசன்னா சில்வா,*
*பணிப்பாளர் நாயகம்,*
*நகர அபிவிருத்தி அதிகார சபை.*

*"செத்சிறிபாய",*
*பத்தரமுல்லை,*
*2010, மாச்சு 17.*

*4- 82/2*

---

## ஹிக்கடுவை நகர சபைப் பகுதிக்கான அபிவிருத்தித் திட்டத்தின் அங்கீகாரம்

*1982 ஆம் ஆண்டு திருத்தப்பட்ட நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்ட இல. 41 இன் 8 F ஆம் பிரிவின் கீழ் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் நகர அபிவிருத்தி மற்றும் புனிதப்பகுதி அபிவிருத்தி அமைச்சராகிய தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்தன ஆகிய நான் நகர அபிவிருத்தி அதிகார சபையினது முகாமைச் சபையின் 2009.09.29 ஆந் திகதியின் பரிந்துரையைக் கருத்திற் கொண்டு, ஹிக்கடுவை நகரசபைப் பகுதியின் நகர அபிவிருத்திப் பகுதித் திட்டத்தினை இத்தால் அங்கீகரிக்கின்றேன்.*

*தினேஷ் சந்திர ரூபசிங்க குணவர்தன,*
*நகர அபிவிருத்தி மற்றும் புனிதப்பகுதி அபிவிருத்தி அமைச்சர்.*

*"செத்சிறிபாய",*
*பத்தரமுல்லை,*
*2010, மாச்சு 09.*

## ஹிக்கடுவை நகர சபைப்பகுதிக்கான அபிவிருத்தித் திட்ட அங்கீகாரம்

*2010 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 9 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட ஹிக்கடுவை நகரசபைப் பகுதியானது நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திருத்தப்பட்ட 1982 ஆம் ஆண்டின் சட்ட இலக்கம் 4 இற்கு அமைய 8A இன் கீழ் தயாரிக்கப்பட்டு கௌரவ நகர அபிவிருத்தி மற்றும் புனிதப் பகுதி அபிவிருத்தி அமைச்சருக்கு சட்டப் பிரிவு 8F இன் கீழ் உரித்தாக்கப்பட்ட திருத்தச் சட்டத்திற்கு அமைய இவ்வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுமென பொதுமக்கள் இத்தால் அறிவிக்கப்படுகின்றன.*

பிரசன்னா சில்வா,
பணிப்பாளர் நாயகம்,
நகர அபிவிருத்தி அதிகார சபை.

"செத்சிறிபாய",
பத்தரமுல்லை,
2010, மாச்சு 17.

4- 82/3

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.